பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 30 | ஞாயிற்றுக்கிழமை | 14.07.2024 | அதிர்வு 348

**ஐக்கிய மக்கள் சக்தியின்**

## சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்ட பொன்சேகா எம்.பி.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. அந்தக் கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 06▶



# ரணிலின் எந்தவொரு சதியாலும் தேர்தலைப் பிற்போடவே முடியாது!

## தம்புள்ளை மக்கள் சந்திப்பில் அநுர திட்டவட்டம்





அரசமைப்புக்கு முரணாக எவ்வாறான சதிகளை மேற்கொண்டாலும் ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 06▶

## வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் செவ்வாயன்று கவனவீர்ப்புப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையாழ்ப்பாணம்மாவட்டசெயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தத் தகவலை வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் 06▶



இலங்கைத் தமிழரசு கட்சியின் வழக்குத் தொடர்பான எதிராளிகள் தரப்புகள் அனைத்தும் இன்று வவுனியாவில் சந்திக்கின்றன.

கட்சியின் வழக்கு வரும் வெள்ளிக்கிழமை 19ஆம்திகதிதிருகோணமலை மாவட்ட நீதிமன்றுக்கு வருகின்றது. அதன் போது வழக்கை சுமூகமாக முடிவுக்கு கொண்டு வரும் விதத்தில் வழக்காளியுடன் ஒரு இணக்கத்துக்கு வர வேண்டிய தேவை கட்சி நிர்வாகிகளான எதிராளிகளுக்கு உள்ளது.

அப்படி வழக்காளியுடன் ஓர் இணக்கத்துக்கு வர முன்னர் அவ்விடயம் தொடர்பில் எதிராளிகளான கட்சி நிர்வாகிகள் மற்றும் இடையீட்டு எதிராளி ஆகியோர் தங்களுக்கு இடையே ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எட்ட வேண்டும். அந்த நிலைப்பாட்டை 06▶





# முன்னாள் நகர பிதாவின் பூதவுடலுக்கு தமிழரசுக் கட்சி கொடி போர்த்தி அஞ்சலி

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பருத்தித்துறை நகர பிதா வேலுப்பிள்ளை நவரத்தினராசாவின் பூதவுடலுக்கு அன்னாரின் இல்லத்தில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கட்சிக் கொடியைப் போர்த்தி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு பருத்தித்துறை – தும்பளை கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் அரசியல் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் உறுதி



மக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்து, ஜனநாயகத்தை நிலைநாட்டுவார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

நியூசிலாந்து நாடாளுமன்றின் சபாநாயகர் ஜெரி ப்ரவுன்லி, எதிர்க்கட்சித் தலைவரை நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து ஆகிய இரண்டு நாடுகளுக்கிடையிலான நட்புறவைச் சிறந்த முறையில் பேணுவதற்குத் தாம் உறுதுணையாக இருப்பார் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான தமது திட்டம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் நியூசிலாந்து சபாநாயகரிடம் விளக்கமளித்துள்ளார்.

மக்களின் வாக்களிக்கும் உரிமையை இரத்துச் செய்து தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முனைவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனவே மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலை இடைநிறுத்தக் கோரிய மனு விசாரணை நாளை திங்கள் இடம்பெறும்



ஜனாதிபதி தேர்தலை இடைநிறுத்தக் கோரி சட்டத்தரணி அருண லக்சிறியினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நாளை திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுக்க பிரதம நீதியரசர் உட்பட மூவரடங்கிய நீதியரசர் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த மனு நாளை திங்கட்கிழமை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்குட்படுத்தப் படவுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் முறையான முறையில் நிறைவேற்றப்படாததால், அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுப்பி, அதனை அங்கீகரிக்கும் வரை , ஜனாதிபதித் தேர்தலை நிறுத்தும்படி உத்தரவிட வேண்டும் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின் 2700 நாளான நேற்று இந்த போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும், “எங்கே, எங்கே உறவுகள் எங்கே?“, “கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே?“ என்று கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





# கல்வியியற் கல்லூரிகளில் இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்



கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த எண்ணிக்கை 5,000 இல் இருந்து 7,500 வரை உயரும் எனக் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் உள்ள 19 கல்வியியற் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதேவேளை, கல்வி சீர்திருத்தச் செயற்பாட்டுக்கமைய, கொரியா, ஜேர்மன், பிரான்ஸ், ஹிந்தி மற்றும் ஜப்பான் ஆகிய மொழிகளுக்கான ஆசிரியர்களைப் பாடசாலை கட்டமைப்புக்குள் இணைத்துக் கொள்வதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.


Muhurtham Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
தமிழ் FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எட்டுவதற்காகவே இன்றைய வவுனியா சந்திப்பு என்று தெரிகிறது.

இது தொடர்பில் ஏற்கனவே எதிராளிகளின் சட்டத்தரணிகள் ஒரு சாரார் தமக்குள் கலந்துரையாடி, ஒருமுகப்பட்ட நிலைப்பாட்டை எடுத்து, ஒரு நகல் வடிவத்தைப் பிரேரித்துள்ளனர். அது தொடர்பிலேயே இன்று முடிவு செய்யப்பட இருக்கின்றது.

எதிராளிகளான சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இடையீட்டு எதிராளி இரட்ணவடிவேல் ஆகியோரின் சம்மதத்துடனான ஓர் இணக்க நகலை மற்றைய எதிராளிகளின் சட்டத்தரணிகளுடன் சேர்ந்து சுமந்திரன் தயாரித்து முன் வைத்துள்ளார். ஏனைய எதிராளிகளான மாவை சேனாதிராஜா, சிறிதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் தத்தமது சட்டத்தரணிகளின் கலந்துரையாடல் மற்றும் வழிகாட்டுதலுடன் இன்றைய கூட்டத்துக்கு சமூகம் தந்து, அந்த நகல் குறித்துத் தமது கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

அதன் அடிப்படையில் எட்டு எதிராளிகளின் சார்பிலும் ஒன்றுபட்ட இணக்க ஏற்பாட்டு முன்மொழிவை இறுதி செய்ய வேண்டும்.

அதை அடுத்த தவணையின் போது – அதாவது வரும் வெள்ளிக்கிழமையன்று – நீதிமன்றத்தில் முன் வைத்தால் அது குறித்து பரிசீலித்து இணக்கத்துக்கு – முடிவுக்கு – வருவதற்காக வழக்காளிக்கு ஒரு கால அவகாசத்தை நீதிமன்றம் வழங்கி, வழக்கை ஒத்திவைக்கும்.

அதன் பின்னர் அடுத்த தவணையில் இருதரப்பு இணக்கத்தோடு வழக்கை முடிவுறுத்தலுக்கு கொண்டுவர முடியும்.

ஆயினும் இந்த இணக்க நிலையோடு வழக்கு முடிந்து விடாது. நீதிமன்ற சம்மதத்துடன் காணப்பட்ட இணக்கம், முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் வரை வழக்குக் கிடப்பில் இருக்கும்.

நீதிமன்றின் முன் காணப்பட்ட இணக்கம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கம் ஏதேனும் ஒரு தரப்புக்கு வந்தால், அதன் அடிப்படையில் அந்தத் தரப்பு மீண்டும் இந்த வழக்குக்கு உயிர்ப்புக் கொடுக்கக்கூடிய விதத்தில் அது நிலுவையில் நிறுத்தப்பட்டிருக்கும் என்றே தெரிகின்றது.

# ரணிலின் எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலைத் தடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு வகையில் சூழ்ச்சியில் இறங்கியுள்ளார்.

அதனடிப்படையில் சிலர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்கின்றனர்.

எவ்வாறாயினும் அனைத்து சதிகளும் தோற்கடிக்கப்பட்டு இறுதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அறிவிப்பே வரும்.

எதிர்வரும் 17ஆம் திகதியுடன் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும்.

அதன்பின்னர் வேட்புமனுத் தாக்கலுக்கானதிகதியைத்தேர்தல்கள்ஆணைக்குழு அறிவிக்கும்.

அதன்பின்னர் ஐந்து அல்லது ஆறு வாரங்களில் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்.

குறிப்பாக ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புள்ளது." – என்றார்.

# வட மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கத்தின் தலைவர் கபில்டன் போல் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இந்தப் போராட்டத்தின் நோக்கம் எமக்கான வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி எதிர்கால இளைய தலைமுறைகளும் எம்மைப் போல் அவலநிலையை எதிர்கொள்ளாமல் இருக்கும் வகையிலான கல்விச் சீர்திருத்தத்தை வலியுறுத்துவதையும் மையமாகக் கொண்டுள்ளது.

பட்டதாரிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினை என்பது பட்டதாரிகளை மாத்திரமல்ல அவர்கள் சார்ந்த குடும்பங்களையும் சமூகத்தையும் வாழ்வாதார மற்றும் பொருளாதார ரீதியாக வெகுவாகப் பாதித்துள்ளதுடன் எதிர்காலத் தலைமுறைகளையும் முழு சமுதாயத்தையும் மிக மோசமாகப் பாதிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எனவே, தற்போதைய தேர்தல் காலத்தில் எமக்கான பிரச்சினைகளை வெளிக்கொணர்வதன் மூலம் ஏதேனும் ஒரு வகையிலான சாதகமான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

போராட்டங்கள் மூலம் மட்டுமே எங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரை நிதர்சனமான உண்மை. எனவே, இதனை உணர்ந்து அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் ஒன்றிணைந்து தொழில் உரிமைக்கான ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்." – என்றார்.

# சகல பொறுப்புகளிலிருந்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றக் குழுக் கூட்டம் உள்ளிட்ட கூட்டங்களுக்கு இணைத்துக்கொள்ளாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முன்வைத்த விமர்சனங்கள் மற்றும் அவரது செயற்பாடுகளைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் தென்னிலங்கை ஊடகத்தின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.







# மட்டக்களப்பில் நேற்றும் இடம்பெற்றது வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம்

தமது தொழில் நியமனம் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 12 ஆவது நாளாக நேற்று தமது பிள்ளைகளுடன் வந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக பட்டதாரிகள் நேற்றும் ஒன்றுகூடி போராட்டம் நடத்தினர்.

ஏனைய மாவட்டங்களைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமது தொழில் நியமனத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு கோசங்களும் அவர்களால் எழுப்பப்பட்டன.

"பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்?", "கல்வி கொடுத்த அரசே கொள்ளிவைக்கலாமா?", "அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தினை அழிக்காதே" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளையும் போராட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

வருடங்கள் போகப்போக வயது போவதன் காரணமாக பின்னர் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படும் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஒற்றுமைப் பீலா....!

அரசியல்வாதிகள் பல சமயங்களிலும் மக்களை முட்டாள்களாக எண்ணித்தான் கருத்து வெளியிடுகிறார்கள். அது தவிர்க்கவே முடியாத வழமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மரணக்கிரியை நடத்தியவர்களே இப்போது அது உயிருடன் இருக்கின்றமை போல புதிதாகக் கருத்து வெளியிடுகின்றமை அத்தகைய வழித்தடத்தைச் சேர்ந்ததுதான்.

கட்சிச் செயற்பாடுகளுக்கும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிக்கும் தொடர்பு இல்லை என்ற காரணத்தினால் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிக்கக் கோருகின்றோம் என்றும் புது தத்துவம் பேசியிருக்கிறார் ரெலோவின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா).

இந்தக் கருத்தில் என்ன அரசியல் நேர்மை இருக்கின்றது என்பது விளங்கவில்லை. கூட்டமைப்பாக ஒரு தேர்தலில் போட்டியிட்டு, ஒரு குழுவாக நாடாளுமன்றுக்கு சென்றார்கள். அந்தக் கூட்டமைப்பே இல்லை என்று புதிதாக வேறு கூட்டணி அமைத்தார்கள. கூட்டமைப்பின் பிரதான பங்காளிகளான தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்து ஒதுக்கி, வேறு தனி வழி போகின்றவர்களாகத் தம்மை அறிவித்தார்கள். விரும்பினால் தமிழரசு தங்களுடன் வந்து இணையலாம் என்று நக்கல், நையாண்டி வேறு அவ்வப்போது பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு, இப்போது கூட்டமைப்பின் தலைவராக தங்களில் ஒருவரை நியமிக்கும்படி தமிழரசை நிர்ப்பந்திக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, கட்சிச் செயற்பாடுகளுக்கும் நாடாளுமன்றக் குழு தலைவர் பதவிக்கும் தொடர்பு இல்லை என்று சம்பந்தப்பட்ட எல்லோரையும் முட்டாளாக்கும் விதத்தில் கருத்து வேறு வெளியிடுகின்றார்கள். இது விந்தையிலும் விந்தை.

தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பை உடைக்கவோ, செயலிழக்கச் செய்யவோ முயலவில்லை. சம்பந்தன் அதன் தலைவராக செயல்படும் வரை நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் அது உயிர்ப்புடன் இருப்பதாகவே காட்டிக்கொண்டிருந்தது. கூட்டமைப்புக்கு வெளியில் ஒரு புதிய கூட்டணியை உருவாக்க தமிழரசு முயலவில்லை.

ஆக, அக்கட்சி செய்த ஒரே ஒரு நடவடிக்கை கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் உள்ளூராட்சி தேர்தல்களில் தனித்தனியாக நின்றால் அதிக ஆசனங்களைக்கைப்பற்றலாம், அப்படிப்போட்டியிட்டு விட்டு, தேர்தலின் பின்னர் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் கூட்டமைப்பாக இணைந்து, சேர்ந்து, இயங்குவோம் என்று கூறியதுதான். தமிழரசின் ஒரே நிலைப்பாடாக அது இருந்தது.

அப்படிச் செய்தால் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைப் பிரதேசத்திலும் தங்களின் பொட்டுக்கேடு அம்பலமாகி விடும் என பயந்த கூட்டமைப்பின் மற்ற பங்காளிக் கட்சிகள் இரண்டும், அந்தப் பொட்டுக்கெட்டை மூடி மறைத்து சமாளிப்பதற்காக அவசர அவசரமாக உருக் கொடுத்ததே குத்து விளக்குக் கூட்டணி.

உள்ளூராட்சி தேர்தலுக்காக கூட்டமைப்பை இல்லாமல் ஆக்கும் விதத்தில் குத்துவிளக்குக் கூட்டணியைப் பறக்க விட்ட தரப்புகளுக்கு இப்போது மீண்டும் பொதுத் தேர்தல் என்றதும் குலப்பன் அடிக்கத் தொடங்கிவிட்டது.

தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டு என்ற குதிரையில் ஏறினால்தான் தப்பித் தவறியேனும் தங்களுக்கு ஆசனம் மீண்டும் கிடைக்கும், இல்லையேல் அவுட், அது குத்துவிளக்கில் சாத்தியமேஇல்லைஎன்றயதார்த்தம்எல்லாம் நன்கு புரிய தொடங்கிவிட்டது.

'தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு தேர்தலில் நிற்க வேண்டும் என்பதுதான் நமது நிலைப்பாடு' என்ற ஜனா எம்.பியின் தற்போதைய கருத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரின் மீள் வெற்றி வாய்ப்புக்கான கடைசி எத்தன நகர்வின் முயற்சியேயன்றி வேறில்லை.

குத்துவிளக்கை ஏற்றி, குதூகலம் கொட்டி, வீட்டைக் குட்டி சுவராக்க முயன்று விட்டு, இனி ஒற்றுமை பேசிப் பயனில்லை. It's too late என்றே தோன்றுகின்றது.

# கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்க அனுமதி தேவை; மத்திய அமைச்சரிடம் மீனவர்கள் கோரிக்கை

இந்திய அரசும், இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்தி கச்சதீவு பகுதியில் குத்தகை அடிப்படையில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என மத்திய மீன்வளத்துறை அமைச்சரிடம் விசைப்படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரையில் நடைபெற்ற தேசிய மீன் விவசாயிகள் கருத்தரங்கில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்றார். அதன்பின் நேற்று இராமேஸ்வரம் சென்ற மத்திய மீன்வளத்துறை அமைச்சர், இராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து தனுஷ்கோடி சென்று புயலால் அழிந்த நினைவுச் சின்னங்களையும், அரிச்சல் முனை கடற்கரைக்கு சென்று பார்வையிட்டார்.

அதன்பின் இராமேஸ்வரம் தனியார் தங்கும் விடுதியில் மத்திய அமைச்சரை, பாரம்பரிய இந்திய மீனவர் நலச்சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட மீனவ சங்க நிர்வாகிகள் சந்தித்து, இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும், சிறைபிடிக்கப்பட்ட படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என மனு அளித்தனர்.

அந்த மனுவில் அவர்கள் குறிப்பிடுகையில், “இராமேஸ்வரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் பராம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரமாக மீன்பிடித்தொழில் உள்ளது. பாக்ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கும் போது, இந்திய, இலங்கை கடல் எல்லைகள் அருகருகே இருப்பது தெரியாமல் மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்று விடுகின்றனர்.

அப்போது இலங்கை கடற்படை தமிழக விசைப் படகுகளையும், மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கூறி கைது செய்து சிறையில் அடைக்கிறது. மேலும்



விசைப்படகுகள், வலைகளை பறிமுதல் செய்கிறது. மத்திய அரசு தலையீட்டால் மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் படகு ஓட்டுநர்களை விடுவிக்காமல் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

30 லட்சம் ரூபா முதல் 80 லட்சம் ரூபா வரையிலான விசைப்படகை பறிமுதல் செய்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. கடந்த 2018 முதல் இலங்கை அரசால் 160 விசைப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 5 மீனவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஜுன் 15 முதல் ஜுலை 11 வரை தமிழக மீனவர்கள் 74 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

எனவே பாரம்பரிய கச்சதீவு பகுதியில் வாரத்தில் 3 நாள்கள் குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க மத்திய அரசும், இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்தி அனுமதித்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்.

மேலும் 2021 முதல் 2023 வரை 15 விசைப்படகுகள் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளன. ஒன்றரை ஆண்டுகளாக மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. எனவே மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என மனுவில் கூறப்பட்டுள்ளது.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றது



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்று, அந்தத் தொகுதியை தக்கவைத்துக் கொண்டுள்ளது. 67 ஆயிரத்து 757 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளார் அன்னியூர் சிவா வெற்றி பெற்றுள்ளார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வந்தது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியவுடன் முதலில் தபால் வாக்கை எண்ணும் பணி நடந்தது. அதில், முதல் வாக்கே கையெழுத்து இல்லாததால் செல்லாத வாக்காக அறிவிக்கப்பட்டது. தபால் வாக்குகள் எண்ணிக்கையின் முடிவில், தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 130 வாக்குகளுடன் முன்னிலை பெற்றார். பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணிக்கு 10 வாக்குகள் கிடைத்தன. நாம் தமிழர் வேட்பாளர் வைத்தியர் அபிநயா 2 வாக்குகள் பெற்றார்.

தொடர்ந்து மின்னணு வாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. மொத்தம் 20 சுற்றுகளாக வாக்கு எண்ணப்பட்டது. முதல் சுற்று முதலே தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா முன்னிலை வகித்து வந்தார். 20 ஆவது சுற்றின் முடிவில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 1,24,053 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி 56 ஆயிரத்து 296 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா 10 ஆயிரத்து 602 வாக்குகள் பெற்றார். செல்லுபடியற்றதாக 853 வாக்குகள் பதிவாகின. 67 ஆயிரத்து 757 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா வெற்றி பெற்றுள்ளார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றி குறித்து தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் அவர் குறிப்பிடுகையில்.

“விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கவுக்கு மகத்தான, மாபெரும் வெற்றியை வழங்கிய விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேநேரத்தில் இந்தியா முழுமைக்கும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இண்டியா கூட்டணி கட்சிகள் 11 இடங்களில் முன்னணியில் இருக்கிறது. பா.ஜ.க. தோல்வியைத் தழுவி இருக்கிறது. மக்களவைத் தேர்தலில் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெறாத கட்சி தான் பா.ஜ.க. இறங்கி வந்து சில கட்சிகளின் தயவால் மத்தியில் ஆட்சி அமைத்துள்ளது பா.ஜ.க.

அத்தகைய தோல்வி முகமே பா.ஜ.கவுக்கு இந்த இடைத் தேர்தலிலும் தொடர்கிறது.தோல்விகளில் இருந்து பா.ஜ.க. பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். மாநில உணர்வுகளை மதிக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்த முடியாது என்பதை பாஜக இனியாவது உணர வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை 2019 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. தலைமையிலான இண்டியா கூட்டணியின் வெற்றி தொடர்கிறது. தி.மு.க. வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க வெற்றியாக விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றியும் அமைந்துள்ளது.

இந்த வெற்றியானது எங்களுக்கு மாபெரும் உற்சாகத்தையும், எழுச்சியையும், அதேசமயத்தில் கூடுதல் பொறுப்பையும் கொடுத்திருக்கிறது. நாள்தோறும் நல்ல பல திட்டங்கள் என சாதனைகள் செய்து வரும் தி.மு.க. அரசின் சாதனைகளுக்கு மகுடம் சூட்டுவதாக, சாதனை வெற்றியாக இது அமைந்துள்ளது. நாங்கள் எங்களது சாதனைப் பயணத்தையும், வெற்றிப் பயணத்தையும் தொடர்கிறோம்.மக்களோடு இருக்கிறோம். மக்கள் எங்களோடு இருக்கிறார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வென்ற தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“தி.மு.க. 67 ஆயிரத்து 757 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இது தமிழக முதல்வருக்கு கிடைத்த வெற்றி. இந்த வெற்றிக்காகப் பாடுபட்ட உதயநிதி உள்ளிட்ட அமைச்சர்களுக்கும், எம்.எல்.ஏ-க்கள், மாவட்டப் பொறுப்பாளர் கௌதமசிகாமணி ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பா.ம.க. அவர்களின் பிரச்சாரத்துக்கு ஏற்ப வாக்குகளை பெற்றுள்ளனர். இந்த வெற்றி முதல்வரின் சாதனைக்குக் கிடைத்த வெற்றி.” – என்றார்.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 71 பேர் உயிரிழப்பு



காசாவின் தெற்கு பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 71 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கான் யூனிஸ் பகுதியில் நடத்தப்பட்டுள்ள இந்த தாக்குதலில் 289 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் நாசர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன்போது ஹமாஸ் தரப்பின் இராணுவ பிரிவின் தலைவரான மொஹமட் டெயிப் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என இஸ்ரேல் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மற்றுமொரு ஹமாஸ் தரப்பின் உயர் அதிகாரி ஒருவரும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

எனினும், மேற்படி இருவரும் உயிருடன் உள்ளனரா? என்பது தொடர்பான விபரங்கள் வெளியாகவில்லையென சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# தானியங்களைக் கொள்ளையிட்டு தப்ப முயன்ற வெளிநாட்டுக் கப்பலை கைப்பற்றியது உக்ரைன்



ரஷ்யா ஏற்றுமதி செய்த உக்ரைனுக்கு சொந்தமான தானியங்களுடன் வெளியேற முயன்ற வெளிநாட்டு சரக்குக் கப்பல் ஒன்றை அதிரடியாகக் கைப்பற்றியுள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட கிரிமியன் தீபகற்பத்தில் இருந்து உக்ரேனிய தானியங்களை அந்த கப்பல் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்ததாக கூறப்படுகிறது.

இதன்போது கப்பலின் மாலுமியையும் உக்ரைன் அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கப்பலானது ஏற்கனவே ஒருமுறை கிரிமியா பகுதியில் இருந்து தானியங்களுடன் வெளியேறியுள்ளதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

Usko ஆகர என்ற அந்த கப்பல் மற்றும் அதன் மாலுமிகள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் நுழைவதற்கான விதிகளை மீறியுள்ளனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், அஜர்பைஜான் நாட்டவர் என அடையாளம் காணப்பட்ட அந்த மாலுமி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் 5 ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் , மேற்கத்திய நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தாலும், இதுவரை இந்த விவகாரத்தில் முறையான தீர்வு எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.









# பிள்ளைகளின் எதிர்காலத்திற்குப் பொருத்தமான வலுவான பொருளாதார முறைமை நாட்டுக்குள் கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக வலுவான பொருளாதார முறைமையொன்று கட்டியெழுப்படும். அந்த முறைமை குறுகிய காலத்திற்கானதாக அன்றி நீண்ட காலத்திற்கு நாட்டின் பொருளாதாரம் சரிவடையாமல் பாதுகாக்கும் வகையில் வலுவாக கட்டமைக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற நவீன வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர் பாவனைக்காக ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அதனையடுத்து நீச்சல் தடாகம் அமைந்திருக்கும் பகுதியை அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு கையளிக்கும் நிகழ்வும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி சிறப்புச் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியருக்கான சான்றிதழ்களையும் பரிசுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வழங்கி வைத்தார்.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தினால் ஜனாதிபதி நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 10 ஆயிரம் ரூபா பாடசாலையின் அதிபர் பேர்ஸி மஹாநாமவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"தற்போது பின்பற்றும் பொருளாதார முறைமைகள் மூலம் முன்னேற்றத்தை அடைய முடியாது. இதனால் ஒரு நாடு என்ற வகையில் மேலும் கடன் படுவதை மாத்திரமே செய்ய முடியும். அவ்வாறு செய்தால் இந்த பிள்ளைகள் எதிர்பார்க்கும் சிறந்த எதிர்காலமும் கிடைக்காது. அதேபோல் இன்னும் 15 வருடங்களில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படும். அதனால் நாடாக முன்னோக்கிச் செல்வதா? மீண்டும் பொருளாதாரம் சரிவடைய இடமளிப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டும். இங்கிருக்கும் பிள்ளைகள் இன்னும் 50 வருடங்களுக்கு மேலாக வாழப் போகிறீர்கள். அதனால் அரசாங்கம் என்ற வகையில் நாம் 2050 பற்றி சிந்திக்காமல் 2075 வரையில் தூர நோக்குடன் சிந்திக்க வேண்டியது அவசியம்.

அதனாலேயே நாட்டின் இறக்குமதி பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்ற எதிர்பார்க்கிறோம். நாட்டில் பல முறைமைகள் மாற்றப்பட வேண்டும். அதற்காகவே பொருளாதார மாற்றச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்போது விவசாய நவீனமயம்மால் திட்டம் மிக முக்கியமானது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் இயலுமை விவசாயிகளுக்கே உள்ளது. அதற்காகவே அவர்களுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக் கொடுக்க முதலில் நடவடிக்கை எடுத்தோம். விவசாயிகள்

தொடர்ச்சி▼





















# பிள்ளைகளின் எதிர்காலத்திற்குப் பொருத்தமான வலுவான பொருளாதார முறைமை நாட்டுக்குள் கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நல்ல விளைச்சலை பெற்றுத்தந்தனர். அவர்களுக்கு நன்றி கூறும் வகையிலேயே ‘உறுமய’ தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இலவச காணி உறுதிகள் வழங்கப்படுகிறது. இதன்போது வடமேல் மாகாண மக்களுக்கு பெரும் சேவை ஆற்றப்படும்.

எதிர்வரும் காலத்தில் உலக சனத்தொகை 02 பில்லியன்களால் அதிகரிக்கப்போகிறது. 2050 களில் 02 பில்லியனுக்கும் அதிகளவானர்களுக்கு உணவு தேவை இருக்கும். உலகத்தின் உணவு தேவையைப் பூர்த்தி செய்ய நாம் புதிய தொழில்நுட்பத்துடன் இயன்றளவு அதிக உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். இந்த உலர் வலயத்தில் மாத்திரம் நாம் அரிசி உற்பத்தியில் தன்நிறைவு காண முடியும். விவசாயிகளுக்கு செழிப்பு கிடைக்கும் போது அவர்களின் பணம் அநுராதபுரம், தம்புள்ளை, வவுனியா போன்ற பகுதிகளுக்கு வந்து சேரும். அதனால் அந்த நகரங்களும் அபிவிருத்தி அடையும்.

அதேபோல் இந்த மாகாணத்தில் சூரிய சக்தி வேலைத் திட்டத்தையும், சுற்றுலா வர்த்தகத்தையும் வலுப்படுத்தும் இயலுமை உள்ளது. புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை நாம் ஆரம்பிக்க வேண்டும். திருகோணமலை அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்காக இந்தியாவுடன் கைகோர்த்திருக்கிறோம். அதன் பலன்கள் அநுராதபுரத்துக்கும் கிடைக்கும்.

அதேபோல் நாம் புதிய பல்கலைக்கழகமொன்றை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். அதனால் புதிய மூன்று தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் கிடைக்கும். தொழில்நுட்பத் தெரிவுகளை வழங்க வெளிநாட்டு பல்கலைக்கழங்களும் முன்வந்துள்ளன. நாம் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவுடன் முன்னேற வேண்டும். எதிர்காலத்திற்காக புதிதாக சிந்திக்க வேண்டும்.

சில அரசியல் வாதிகள் 05 வருடங்களில் ஆட்சி மாற்றம் செய்வதை பற்றி சிந்திக்கிறார்கள். இல்லாவிட்டால் அதிகாரத்தில் இருப்பவரை விரட்டியடுப்பது குறித்து சிந்திக்கிறார்கள். இவ்வாறான அரசியலின் பலனாகவே நாட்டின் பொருளாதாரம் சரிவு கண்டது. அதனால் நாட்டின் பொருளாதார நிலைமையும் சரிவடைந்தது.

அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரநிதிநிதிகளை இணைந்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்தது.

அதன்படி இந்த நாட்டில் முதல் முறையாக தேசிய மட்டத்தில் சிந்திக்ககூடிய அரசியல் குழுவொன்று உருவானது. எந்த அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் நாட்டை பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். அடுத்த ஐந்து வருடங்களில் ஒரு நாடாக நாம் முன்னேற போகிறோமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். அதனால் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து செயலாற்றுவோம்.”– என்றார்.

















# 150 கிலோ வோட் மின்சார உற்பத்திக்கான சூரிய சக்தியை ஜனாதிபதி திறந்து வைத்தார்

வரலாற்றில் பிரசித்தி பெற்ற வணிக மற்றும் பொருளாதார மையமாக அநுராதபுர நகரத்தை மீண்டும் உலகப் பிரசித்தமான நகரமாக மாறுவதற்குத் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தஞ்சாவூர், மதுரை மற்றும் காஞ்சிபுரம் நகரங்களைப் பற்றி இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது. ஆனால் அதன் நான்காவது நகரமாக கருதப்பட வேண்டிய அநுராதபுரத்தின் முன்னேறத்துக்கான ஏற்பாடுகள் இதுவரையில் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அநுராதபுரம் ஸ்ரீ மகா போதிய வளாகத்தில் எல்.ரி.எல். வர்த்க குழுமத்தினால் அமைக்கப்பட்ட 150 கிலோவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி கட்டமைப்பை கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று அநுராதபுரம் புனித நகருக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சியம் மகா நிகாயவின் மல்வத்து பீட பிரதம சங்கநாயக்கரும அட்டமஸ்தான விகாராதிபதியுமான வண. பல்லேகம ஹேமரதன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அதனையடுத்து ஜய ஸ்ரீ மகா போதியை தரிச்சுத்து ஆசி பெற்றுகொண்ட ஜனாதிபதி சூரிய சக்தி கட்டமைப்பை திறந்து வைக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

அதனையடுத்து அநுராதபுரம் புனித நகருக்கு வருகைத் தந்திருந்த மக்களோடும் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

காபன் விமோசனத்தை மட்டுப்படுத்தி, நிகர பூச்சிய உமிழ்வை அடைவதற்காக அரசாங்கத்தின் தேசிய கொள்கையை சாத்தியப்படுத்துவதன் ஓர் அங்கமாக எல்.ரி.எல். ஹோல்டிங்க்ஸ் நிறுவனத்தின் கிலோ வோட் 150 சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான கட்டமைப்பு ஜயஸ்ரீமகா போதிய வளாகத்தில் நிறுப்பட்டுள்ளது.

ஜய ஸ்ரீ மகா போதி வளாகத்தின் முழுமையான மின்சக்தி தேவையை இந்த சூர்ய சக்தி கட்டமைப்பு பூர்த்தி செய்யும் என்பதோடு, வரலாற்றில் முதல் முறையாக ஜெய ஸ்ரீமஹா போதிய வளாகம் முழுமையாக காபன் விமோசனம் பெற்ற பூச்சிய உமிழ்வை கொண்ட வளாகமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“சூரிய சக்தி உள்ளிட்ட மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளை இலங்கையின் அறிமுகப்படுத்த முன்வரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைப்பு வழங்கும் எல்.ரி.எல். நிறுவனத்திற்கு நன்றி கூற வேண்டும். அதனால் இந்த நிறுவனம் உலக பிரசித்தமான நிறுவனமாக மாறியுள்ளது. ஆனால் அவர்களில் ஆரம்பம் இலங்கையில் நிகழந்தது என்பதை அவர்கள் இன்றும் மறக்கவில்லை.அதனால் ஜய ஸ்ரீமகா போதிய வளாகத்திலும் இவ்வாறான பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்காலத்திலும் ஒத்துழைப்புக்களை வழங்குவோம். அநுராதபுர நகரத்திற்கு ஆயிரம் வருடங்கள் பழமையான வரலாறு உள்ளது. அதேபோல் அநுராதபுரம் பழமையான வர்த்தக மற்றும் பொருளாதார மையமாகவும் திகழ்ந்துள்ளது. இத்தகைய பெறுமதியான நகரத்தில் பல்வேறு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியின் காலத்தில் யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளருடன் கலந்துரையாடி கலாசார முக்கோண வலயம் ஆரம்பிக்கப்பட்டது. பொலன்நறுவை, சீகிரிய, தம்புள்ளை,கண்டி,அநுராதபுரம் போன்ற நகரங்கள் இதனால் பிரசித்தமடைந்தன. அதன் பின்னர் எந்தப் புதிய திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் நாம் இப்போது இந்த நகரத்தில் தொல்லியல் ஆய்வு பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

தற்போது காம்போடியாவின் அங்கோர் நகரில் யுனெஸ்கோ அமைப்பு பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் நிதியுதவியுடன்

தொடர்ச்சி▼











# 150 கிலோ வோட் மின்சார உற்பத்திக்கான சூரிய சக்தியை ஜனாதிபதி திறந்து வைத்தார்

தொடர்ச்சி▲

பெரிய அளவிலான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. 30-40 வருடங்களாக இந்த பணிகள் இடம்பெறுகின்றன. அது போலவே யுனெஸ்கோவினால் பிரான்ஸ் உதவியுடன் லாவோஸ் – இலுவாங் பிரபாங் நகரத்திலும் அந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சீன அரசாங்கத்தின் சொந்த நிதியை கொண்டு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அநுராதபுர நகரத்தில் இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் தொல்லியல் திணைக்களம் மற்றும் கலாச்சார முக்கோண வலயம் ஆகிய இரு தரப்பினருக்கும் இந்த பணிகளை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

அதேபோன்று மகாவிகாரையில் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள டர்ஹெம் பல்கலைக்கழகத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. நாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி அந்த பணிகளைவும் விரைவில் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன். அந்த பணிகள் கலாநிதி பிரசன்ன குணவர்தனவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மகா விகாரை என்பது அநுராதபுர வரலாற்றின் ஒரு பகுதியாகும். எனவே இந்த அதனால் அநுராதபுர நகரம் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பின் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன்.

நீண்ட காலங்களுக்கு இந்த நகரத்தின் அகழ்வாராய்ச்சி பணிகளை மேற்கொள்ளுமாறு அவரிடத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளேன். இந்த பணிகளின் போது எமக்கு ஒத்துழைக்க பல்வேறு பல்கலைக்கழகங்களும் முன்வந்துள்ளன. இவ்வாறு அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல தீர்மானித்துள்ளோம்.

மதுரை, காஞ்சிபுரம், தஞ்சாவூர் பற்றி பேசுகின்ற நாம் அதன் நான்காவது நகரமாக அநுராதபுரத்தை மறந்துவிட்டோம். எனவே அநுராதபுர நகரத்தின் அபிவிருத்திக்காக இந்த பணிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு இணையாக அநுராதபுரத்தில் பல ஹோட்டல்களையும் அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனால் இந்த நகரத்துக்குள் பாரிய முன்னேற்றம் ஏற்படும்.” – என்றார்.








# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவிக்கான பேராசை?



புருஜோத்தமன் தங்கமயில்

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவராகும் பேராசையோடு இன்றும் பலர் வலம் வருகிறார்கள். ஏற்கனவே கூட்டமைப்பை விட்டுச் சென்று புதிய தேர்தல் கூட்டணியை அமைத்தவர்களும், தனி வழி பயணத்தில் கருத்தாக இருந்தவர்களும் மீண்டும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஒருங்கிணைக்கப்பட்டு, தமிழ் மக்களின் ஒற்றுமையின் கோசமாக எழுந்த கூட்டமைப்பு, சுமார் ஒன்றரை தசாப்த காலம் நிலை பெற்றது. முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான பத்து ஆண்டுகள் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக நிலை அங்கீகாரத்தோடு இருந்தது. ஆனால், குறுகிய வாக்கு அரசியல் நலன்களைக் கருதி கூட்டமைப்பினை அதன் பங்காளிக் கட்சிகளே வலிந்து காணாமல் ஆக்கின. இப்போது, மீண்டும் பதவிகளுக்காக கூட்டமைப்பு தொடர்பிலும் அதனைக் காக்கும் தார்மீகம் பற்றியும் பேசத் தலைப்படுகிறார்கள்.

மறைந்த பெருந்தலைவர் இரா.சம்பந்தன்தான் கூட்டமைப்பின் ஒரே தலைவர் என்பதுதான் வரலாறாக பதியப்படும். ஏனெனில், அவரின் இறுதிக் காலத்திலேயே கூட்டமைப்பு கலைந்து போய்விட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலாப நட்டக் கணக்கினைக் கருத்தில் கொண்டு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தனித்துத் தனித்து போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி முன்வைத்தது. அதனை, அந்தக் கட்சி தன்னுடைய மத்திய குழுத் தீர்மானமாக முன்வைத்து அறிவிக்கவும் செய்தது. கூட்டமைப்பாக ஒன்றாக வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டுவிட்டு பங்காளிக் கட்சிகள், பொது வெளியில் தமிழரசுக் கட்சியை விமர்சித்து அரசியல் செய்வதை, அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் இரசிக்கவில்லை. அதுவும் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களை பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் பகிரங்கமாக விமர்சித்தமையும் கூட, தமிழரசுக் கட்சியின் பின்னடைவுக்கு காரணம் என்பது, அந்தக் கட்சியினரின் எண்ணம். இதனால், அடுத்த தேர்தல்களில் தனித்து தமிழரசுக் கட்சி போட்டியிட வேண்டும் என்ற எண்ணப்பாடு பலமாக எழுந்தது. அதனால்தான், அந்தக் கட்சியின் மத்திய குழுவிலும் தனித்து போட்டியிடுவது என்ற முடிவுக்கு தொண்ணூறு வீதத்துக்கும் அதிகமானவர்களின் ஆணை கிடைத்தது. இந்த ஆணையை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் இலாபக் கணக்காக பங்காளிக் கட்சிகளிடம் தமிழரசுக் கட்சி முன்வைத்தது. இதனை ஏற்க மறுத்த பங்காளிக் கட்சிகள், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை அமைத்தன. இன்று அந்தக் கூட்டணி, தமிழ்த் தேசியப் பேரவை என்ற புதிய நாமத்துடன் வலம் வரும், தமிழ்ப் பொது வேட்பாளர் அணியின் அங்கம்.

சம்பந்தன் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தில் இருக்கவில்லை. தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லும் நோக்கோடு இருந்தார். ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் இன்னும் சில மூத்தவர்களும்தான், சம்பந்தனை எப்படியாவது தேர்தலில் போட்டியிட வைத்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்கள். இல்லாவிட்டால், சம்பந்தன் கூறும் வயது மூப்பு மற்றும் உடல் உபாதைகளைக் காரணம் காட்டி தங்களையும் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கச் சொல்லிக் கோரிவிடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு. சம்பந்தன் இறுதித் தேர்தலிலும் நேரடியாக போட்டியிட்டார் வெற்றியும் பெற்றார். ஆனால், அந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றாலும் அவரினால், அதற்கு முன்னால் கூட்டமைப்பின் தலைவராக செலுத்திய ஆளுமையை செலுத்த முடியவில்லை. சம்பந்தரின் காலம் முடிகின்றது, அதற்குள் எப்படியாவது அவரின் இடத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று பலரும் ஆலாய் பறக்க ஆரம்பித்துவிட்டார்கள். ரெலோ, வெளிப்படையாக செல்வம் அடைக்கலனாதனை கூட்டமைப்பின் இணைத் தலைவர் என்று குறிப்பிட்டு அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியது. சம்பந்தன், தங்களிடம் கூட்டமைப்பின் தலைமையை கையளிக்க வேண்டும் என்று கோரியது. அந்தக் கோரிக்கையோடு, புளொட்டும் கூட நின்றது. அதனை அரசியல் அறம் என்றும் பேசியது.

கூட்டமைப்பு அமைக்கப்பட்ட போது, பழைய முரண்பாடுகளையெல்லாம் மறந்து புளொட்டையும் கூட்டமைப்புக்குள் இணைப்பதற்காக புலிகள் முன்வந்தார்கள். ஆனால், அந்த அழைப்பைப் புறந்தள்ளிவிட்டு அரசோடு இணைந்து புளொட் இயங்கியது. இறுதி மோதல்களில் அரங்கேறிய போர் குற்றங்களில் புளொட்டுக்கும் பங்கிருப்பதான குற்றச்சாட்டுக்களும் உண்டு. அந்த

தொடர்ச்சி▼



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவிக்கான பேராசை?

தொடர்ச்சி▲

இயக்கம் புலிகளின் காலத்துக்குப் பின்னர்தான், கூட்டமைப்புக்குள் வந்தது. அது தேர்தல் வெற்றிகளை இலக்கு வைத்து நிகழ்ந்த இணைவு. ஏனெனில், புளொட்டும் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் தொடர்ச்சியாக தேர்தல்களில் தோல்வியடைந்து வந்திருந்தனர். அதனைத் தவிர்ப்பதற்காக, மறைந்த தர்மலிங்கத்திற்கு இருக்கும் நற்பெயரை முன்னிறுத்தி சம்பந்தனிடமும் மாவையிடமும் சித்தார்த்தன் பேசி, கூட்டமைப்புக்குள் வந்தார். அதனால், அவர் தொடர்ந்து தேர்தல்களில் வெற்றிபெற முடிந்தது. ஆனால், புளொட் இணைவு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மத்தியில் தொடர்ச்சியாக அதிருப்தி இருந்தது. அது, இறுதி மோதல் காலத்தில் ராஜபக்ஷக்களுடன் புளொட் இணக்கமாக இயங்கிமை தொடர்பிலானது. இன்றைக்கும் புளொட்டின் புதியவர்கள், தங்களின் மீது புதிய வர்ணங்களைப் பூசி பாவ மறைப்புச் செய்யலாம். ஆனால், புலிகளுக்கு எதிரான தங்களின் யுத்த வெற்றியில் புளொட்டின் பங்களிப்புத் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவே வெளிப்படையாகப் பாராட்டிய வரலாறுப் பதிவுகள் உண்டு. ராஜபக்ஷக்களில், அதிலும் கோட்டா யுத்த வெற்றியை எந்தக் காலத்திலும் ராஜபக்ஷக்களைத் தாண்டி யாரும் பங்கு போடுவதை ரசித்தவரில்லை. ஆனால், அவரே கூட புலிகள் அழிப்பின் பங்காளிகள் என்ற அங்கீகாரத்தை புளொட்டுக்கு வழங்கினார். கோட்டாவின் யுத்த வெற்றி தொடர்பிலான நூல் வெளியீட்டு விழாவில் முதல் வரிசையில், சித்தார்த்தன் அமர்ந்திருக்கும் படங்கள் இன்றைக்கும் இணையத்தில் வலம் வருகின்றன. அப்படியான வரலாற்றைக் கொண்டிருக்கிற புளொட் குறித்து எப்படி அபிமானம் கொள்ள முடியும் என்பது தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கேள்வி. கடந்த பொதுத் தேர்தலில் சித்தார்த்தன் வெற்றி பெற்றதும், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் சொன்னார். “மறைந்த தர்மலிங்கம் மக்களுக்கு தொடர்ச்சியாக செய்து வந்த நன்மைகளின் பலனை சித்தார்த்தன் அறுவடை செய்கிறார். சித்தார்த்தனை கட்சிக்குள் மாவை கொண்டு வந்ததே, தர்மலிங்கத்தாருக்கு இருக்கும் பெயரைப் பயன்படுத்தி சித்தார்த்தனுடன் சேர்ந்து தானும் வாக்குகளைப் பெறலாம் என்ற நோக்கில்தான். ஆனால், அதுவே, மாவையை தோற்கடித்துவிட்டது...” என்று. இன்றைக்கும் சித்தார்த்தனுக்குப் பின்னரான புளொட்டுக்கான எதிர்காலம் என்பது கேள்விக்குரியது. ஏனெனில், அந்தக் கட்சி அடுத்த கட்டத் தலைவர்களை வளர்க்கவே இல்லை. சித்தார்த்தனும் தன்னுடைய தந்தையாரின் நாமத்தில் தேர்தல்களில் வென்றுவிட்டு சென்றுவிடலாம் என்ற நோக்கத்தோடு தன்னுடைய அரசியல் இலக்கைச் சுருக்கிக் கொண்டுவிட்டார். அப்படியான நிலையில், எதிர்காலமே இல்லாத புளொட்டின் கருத்துக்களை தமிழரசுக் கட்சி உள்வாங்கிப் பிரதி பலிக்கும் என்பதெல்லாம் எதிர்பார்க்க முடியாது.

கூட்டமைப்பை மீட்டு அதன் தலைவர் பொறுப்பில் அமரும் நோக் கில் இருப்பவர்களின் மாவை முக்கியமானவர். அவர் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து சில மாதங்களில் விலக வேண்டி வரும். தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வில் மாவை உள்ளிட்டவர்கள் செய்த முறைகேடுக ளினால்தான், அவர் இன்னமும் தலைவராக நீடிக்கிறார். தலைவர் தேர்வு, முறையாக கட்சி யாப்புக்கு அமைய நடைபெற்றிருந்தால், மாவை முன்னாள் தலை வராகியிருப்பார். ஆனால், தற்போது அவரின் குரல் கட்சிக்குள்ளும் வெளியிலும் கவனம் பெறுவதில்லை. ஏனெனில், அவர் தற்போது தீர்மானம் எடுக்கும் நிலையில் இல்லை. சம்பந்தனின் மறைவோடு, கூட்ட மைப்பின் தலைவர் அடையாளத்துக்காக மாவை ஏங்கு கிறார். அதன்மூலம், அடுத்த தேர்தல்களை அவர் குறிவைக்கலாம். அதனால்தான், கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவியை செல்வத்துக்கு வழங்க வேண்டும் என்று கட்சியினரிடம் எந்தவித ஆலோசனையையும் நடத்தாமல் எழுந்தமானமாக அறிவித்திருக்கிறார். ஆனால் அவரின் அறிவிப்பை சொந்தக் கட்சிக்காரர்கள் கூட ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவி தொடர்பில் மத்திய குழுவில் ஆலோ சித்துவிட்டு வருகிறோம் என்று ரெலோவிடமும் புளொட் டிடமும் கூறிவிட்டார்கள். அத்தோடு, கூட்டமைப்பினை விட்டு வெளியே சென்று புதிய கூட்டணியை அமைத்துவிட்டு, கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவியைக் கோருவது என்ன நியாயம் என்று செல்வத்திடம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

அடிப்படையில், தற்போது கூட்டமைப்பில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கான அங்கலாய்ப்பு என்பது, அதனைக் கொண்டு தங்களை தமிழ் மக்களின் பெருந்தலைவராக நிறுவும் உத்தியாகும். அதாவது, கடந்த காலங்களில் சம்பந்தன் வகித்த பாகத்தை தாங்களும் எடுத்துக் கொள்ளலாம் என்ற நப்பாசை. ஆனால், அப்படியான சூழல் இப்போது இல்லை. அது

தொடர்ச்சி▼

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவிக்கான பேராசை?





தொடர்ச்சி▲

போக, இப்போது இருப்பவர்களில் யாரும் சம்பந்தனும் இல்லை. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்று வெளியில் சொல்லப்பட்டாலும், அது சட்ட ரீதியாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிதான். தங்களின் கட்சிக்கான அங்கீகாரத்தை, நாடாளுமன்றத்துக்குள் இன்னொரு கட்சியிடம் தமிழரசுக் கட்சி விட்டுக்கொடுக்காது. அதற்கு ஒரு வாய்ப்பும் இல்லை. அதுபோக, புதிய கூட்டில் பொது வேட்பாளர் நிலைப்பாட்டில் இருக்கும் ரெலோவிடம் கையளித்து விட்டால், அதனை கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மன்னிக்க மாட்டார்கள். வெளிப்படையாக அறிவிக்கா விட்டாலும் அந்தக் கட்சியின் மத்திய குழு, தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிராகவே இருக்கின்றது. கட்சியின் தலைவரான மாவை, தலைவராக தேர்வாகி தற்போது அதை இழந்திருக்கும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக இருப்பவர்கள், அவர்களின் அந்த நிலைப்பாடே கட்சிக்குள் எடுபடாத போது, ரெலோவையும் புளொட்டையும் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது நகைப்புக்குரியது.

கட்சியின் அரசியல் குழு, மத்திய குழுக்களிடம் ஆலோசிக்காது,கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வத்தினை தெரிவு செய்வதற்கு தன்னுடைய ஆதரவு என்று மாவை அறிவித்த பின்னணி தொடர்பில் ஆராய்ந்தால், அதுவும் பதவி குறித்த கனவு சார்ந்ததாக முடியும். அவருக்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவி மீது தீராக்காதல் உண்டு. கடந்த முறை அதனை அவர் சி.வி.விக்னேஸ்வரனிடம் இழந்துவிட்டார். அதனால், அடுத்த முறை எப்படியாவது அந்தப் பதவியில் அமர்ந்துவிட வேண்டும் என்று அவர் நினைக்கிறார். அதற்கு ரெலோவும் புளொட்டும் ஆதரவளிக்கும் என்று அவர் நம்புகிறார். அதனால்தான், இப்படியான 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற அறிவிப்புக்களை பொது வெளியில் முன்வைக்கிறார். கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி தொடர்பில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இணைய வழியில் கூடிய ஆராய்ந்த கூட்டத்தில் மாவை கலந்து கொள்ளவில்லை. அது, தன்னுடைய நிலைப்பாடுகளுக்கு எதிராக கட்சி நிலைப்பாடுகளை எடுக்கும் என்ற எரிச்சலில் நிகழ்ந்ததாக இருக்காலம். இல்லையென்றால், அன்று பிற்பகலில் ஊடகங்களை அழைத்து பேசும் மாவைக்கு, ஏன் அரசியல் குழுக் கூட்டத்தில், அதுவும் இணைய வழியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்ற கேள்வி முக்கியமானது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் பதவி தொடர்பிலான நகர்வினை, தமிழரசுக் கட்சிக்குள் எழுந்த தலைமைத்துவப் போட்டி மற்றும் அதன் பின்னரான குழப்பங்களைக் கருத்தில் கொண்டுதான் ரெலோ முன்னெடுத்தது. எப்படியாவது, கூட்டமைப்பின் பெயரினால் தெரிவான பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் பங்காளிக் கட்சியினர் நால்வர் ஒன்றாக இருக்கிறோம். தமிழரசுக் கட்சியின் இருவரை தம்பக்கம் இழுத்தால் போதும் பதவியை அடைவதற்கு என்று ரெலோ நினைத்தது. ஆனால், ரெலோவின் நிலைப்பாடுகளுக்கு இசைந்தால், கட்சியிடமும் அதன் மத்திய குழுவிடமும் முகம் கொடுக்க முடியாமல் போய்விடும் என்று தமிழரசுக் கட்சியினருக்கு நன்றகவே தெரியும். அதனால்தான், முந்திக் கொண்டு கட்சிக்குள் ஆராய்ந்து முடிவெடுப்பதாக அறிவித்துவிட்டார்கள். இதுவே, ஜனாதிபதித் தேர்வு போன்று இரகசிய வாக்கெடுப்பாக இருந்தால், செல்வத்துக்கு வாக்களிக்க சிலர் முயன்றிருக்கலாம். ஏனெனில், கூட்டமைப்பின் முடிவுகளை மீறி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து, ஆறு பேர் தனக்கு வாக்க ளித்தனர் என ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் உறுப்பினர்களிடத்திலேயே அறிவித்த காட்சிகள் எல்லாமும் ஏற்கனவே அரங்கேறியிருக்கின்றன. அந்த ஆதரவு நிலைப்பாட்டுக்காக ஆதாயங்களை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றிருப்பதான குற்றச்சாட்டுக்களும் உண்டு.

தற்போதுள்ள நிலையில், கூட்டமைப்பின் (சட்ட ரீதியாக தமிழரசுக் கட்சியின் என்று கொள்க) நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு யாரும் புதிதாக தேர்வாகும் வாய்ப்புக்கள் இல்லை. சம்பந்தனுக்குப் பதிலாக கடந்த காலங்களில் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரனே எதிர்வரும் நாள்களிலும் அந்தப் பணிகளை முன்னெடுப்பார் என்று கருதலாம். ஏனெனில், தேர்தல்களுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கிற நிலையில், புதிய தலைவர் ஒருவரை தேர்வு செய்து இருக்கின்ற குழப்பத்தை மேலும் அதிகரிப்பதற்கு தமிழரசுக் கட்சி விரும்பாது. அதனை, அந்தக் கட்சியின் அரசியல் குழுவில் சிரேஷ்ட தலைவர் சி.வி.கே.சிவஞானம் வெளியிட்ட கருத்துக்கள் உணர்த்தின. அதனால், இனி கூட்டமைப்புப் பற்றி உரையாடல்கள் அர்த்தமற்றவை. அது, சம்பந்தன் என்ற தலைவரோடு மறைந்து போய்விட்டது.



# வறுமையின் பிரபுக்கள் ஆகிவிட்ட சேவகர்கள்

மூடநம்பிக்கை அகன்று, விஞ்ஞானம் வீறு கொண்டு பெரு வளர்ச்சி அடைந்து வரும் சூழலில், நொடிக்கு நொடி உலகில் சகல துறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அதனை ஏற்று, உணர்ந்து, இயைந்து, மிளிர்வதே வாழ்வியல் ஆகும். '

தூய்மையான சுற்றுச்சூழலும் ஆரோக்கியமான உணவும் மனிதனின் ஆயுளை தீர்மானிக்கும். ஆனால் தற்போது பணத்தால் ஏற்படும் நவீன மருத்துவமும் பெரும் பங்கு வகிக்கின்றது. விதிக்கோட்பாட்டிற்கு நவீன மருத்துவமும் பெரும் சவாலாகவே காணப்படுகிறது.

உலகின் முதல் தர வணிகம் மருத்துவமே. உயிர் வாழ்வதற்காக எந்த எல்லைக்கும் மனிதர்கள் போவதுண்டு. அதனால் தான் கூலியைக் கணக்கிடுவதில்லை. ஆகவே அந்தத் துறையின் பெறுமானம் அதிகமாக உணரப்படுகிறது. உயிர் காப்பதனால்தான் அதனை ஆற்றுபவர்களைக் கடவுள் என மக்கள் விளித்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் பலர் அதற்கு தகுதியானவர்களா என்னும் கேள்வியும் உண்டு.

இயல்பாகவே இந்த நாட்டிலே ஊழலும், பக்கச்சார்பும், அரசியல் செல்வாக்கும், சர்வசாதாரணமானவை. சேவை எனத் தொடங்கப்பட்ட அவசிய தேவைகள் மூன்றும் தற்போது மாபியா வணிகம் ஆகிவிட்டன.

வைத்தியச் சேவை பணமில்லாவிட்டால் பிணம் எனும் நிலைக்கு வந்துவிட்டது. நீதிச்சேவை பணமில்லாமல் சிறை எனும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது. கல்விச்சேவை பணம் இல்லாவிட்டால் முட்டாள் எனும் நிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

தற்போதைய படிப்பை அடுத்தவரை ஏமாற்றுவதற்கும் சாமானியனிடமிருந்து பணத்தைப் பறிப்பதற்கும் அவர்களை முட்டாளாக்குவதற்கும்தான் அதிகமானவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

'கற்றதனால் ஆய பயன் என்ன?

'அதிகாரமும் பணமும் அதிகரிக்க போக்கிலித்தனமும், அயோக்கியத்தனமும், ஆணவமும், அகங்காரமும், திமிரும், சுயநலமும், சந்தர்ப்பவாதமும், ஏமாற்றுவதும், புறக்கணிப்பதும் கூடவே குடிகொண்டு விடுகின்றன.

இதில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், மாலை நேரக் கல்வி வணிகர்கள் முதன்மையானவர்களாகத் திகழ்கிறார்கள்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்று ஒரு முதுமொழி உண்டு. வாழ்க்கைக்குப் பணம் தேவை. ஆனால் பணமே வாழ்வாகிறது. இவர்கள் பலர் மனித தன்மையை இழந்து விடுகிறார்கள்.



வி.எஸ்.சிவகரன்

இலங்கையிலே ஊழல் இல்லாத திணைக்களங்கள் உண்டா? நீதி மன்றங்களில் அதிகம் நிலுவையில் உள் ளவை காணி வழக்குகளே. இவற்றில் அதிக பிணக்குகள் சட்டத்தரணிகளால் ஏற்படுத்தப்பட்டவை. அதை இந்த நாட்டின் 'சிஸ்டமும்' தடுக்கத் தவறியேயுள்ளது. தவறாக எழுதிய உறுதிகளும், முறையற்ற உரிமை மாற்றங்களும் இதற்குக் காரணம். குற்றத்தைச் செய்ய வழிவகுத்தவர் களை எந்தச் சட்டமும் தண்டிப்பதில்லை. பாவம், ஏழைகள் மட்டுமே நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். '

சட்டம் அனைவருக்கும் சமம் என்பது உலகில் மிகப்பெரிய பொய். 'சட்டம் சிலந்தி வலை போன்றது. புழு, பூச்சிகள் மட்டுமே சிக்கிக் கொள்கின்றன. பெரிய மிருகங்கள் கிழித்து விட்டு தப்பியோடி விடுகின்றன' என்கிறார் ஓசோ.

இவர்களுக்கு எதிராகவும் மக்கள் மத்தியில் கூட்டு எதிர்ப்புணர்வு உண்டு. விரைவில் அது வெகுசன எழுச்சியாக மாறுவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் இல்லை.

சாவகச்சேரி மருத்துவர் கூறியது ஒன்றும் புதிய விடயம் அல்ல. முகநூல் போராளிகளுக்கு வேண்டுமானால் அவருடைய தகவல் புதிதாக இருக்கலாம் அல்லது அவர் ஒரு ஹீரோவாக தெரியலாம். அவரும் இந்த மருத்துவமாபியா துறையில் ஓர் அங்கமே. இலங்கையின் மருத்துவத் துறையை கடவுளாலும் காப்பாற்ற முடியாது. மருத்துவர் சங்கம் வானளாவிய அதிகாரம் படைத்தது. சுகாதார அமைச்சருக்கோ, செயலாளருக்கோ இல்லாத அதிகாரம் அவர்களுக்குத் தான் உண்டு. தொழிற்சங்கம் எனக்கூறி யாவரையும் ஏமாற்றி வைத்துள்ளனர். இவர்கள் நினைத்ததையே செய்கிறார்கள். இடமாற்றம் உட்பட்ட அனைத்து சலுகைகளையும் அவர்களே தீர்மானித்து விடுகிறார்கள். பெயரளவிற்கு சுகாதார அமைச்சும், அதிகாரிகளும் காணப்படுகின்றனர். நாட்டில் அதிகமான மருத்துவ நிபுணர்கள் சில மாவட்டங்களில் வாரத்தில் மூன்று நாள்களே வேலை செய்கிறார்கள் – அரச வைத்தியசாலைகளில். மீதி நாள்கள் தனியார் வைத்திய சாலையில்தான். அதுவும் மக்கள் தொகை குறைந்த மாவட்டங்களுக்கு நிரந்தரமாக இவர்கள் வருவதில்லை. காரணம் அந்த மாவட்டங்களில் பெரிய அளவில் தனியார் வைத்திய

தொடர்ச்சி▼

# வறுமையின் பிரபுக்கள் ஆகிவிட்ட சேவகர்கள்

**தொடர்ச்சி▲**

சாலைகள் இல்லை என்பதால் சாதாரண மருத்துவர்கள் கூட எட்டு மணி நேரம் வேலை செய்வது இல்லை.

ஆனால் மாதாந்தம் 120 மணி நேரம் மேலதிக கொடுப்பனவை யாவரும் கட்டாயமாக பெறுகிறார்கள். வேலைக்கு போகாத நாம்களில் கூட ஊதியமும், மேலதிகநேர கொடுப்பனவும் ஒவ்வொரு வைத்தியரின் தரத்துக்கு ஏற்ற வகையிலே மணித்தியாலம் ஒன்றிற்கு ஆகக் கூடிய தொகை 750 ரூபாவரை பெறுகிறார்கள். ஒரு வைத்தியர் 90 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மேலதிகநேர ஊதியத்தைப் பெறுகிறார்கள். இந்த கொடுப்பனவு வழங்காவிட்டால் மருத்துவ நிர்வாகிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக மாகாண மூத்த நிர்வாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். அண்மையில் ஒரு வைத்தியர் தனது தனிப்பட்ட விடயத்திற்கு நீதிமன்றத்திற்கு போன நாளிற்கு கூட மேலதிகக் கொடுப்பனவு பெற்றதால் விசாரணைக்கு உட்பட்ட சம்பவங்களும் உண்டு. இதைவிட தனியார் வைத்தியசாலைகளில் சிலர் மாதாந்தம் பல மில்லியன் ரூபா அளவுக்கு வருமானம் பெறுகிறார்கள்.

ஏழையின் இரத்தத்தை உறிஞ்சும் ஆண்டான், அடிமை, முதலாளித்துவத்திற்கும், மனச்சாட்சியற்ற மீட்டர் வட்டிகாரனுக்கும், சமூகத்தை வறுமையில் வைத்திருக்கத் திட்டமிடும் நிதி நிறுவனங்களுக்கும், வகை தொகை இன்றி வசூலிக்கும் மாலை நேர ஆசிரியர்களுக்கும், லநள எசை, ழெ எசை எனக் கூறி ஏழைகளிடம் பணம் பறித்து, ஏமாற்றி, நீதிக்கு சாவு மணி அடிக்கும் சட்டத்தரணிகளுக்கும் என்ன வித்தியாசம்? இவர்கள் உண்மையில் வறுமையின் பிரபுக்களே. சமூகம் ஏழையாக இருந்தால்தான் இவர்கள் இராஜ வாழ்க்கையைப் பிரபுக்களைப் போல் வாழ முடியும். அறம் இல்லாத பண வசூலிப்புகள், மனசாட்சி – மனிதநேயம் இல்லாமல் ஏக இராஜ்ஜியம் நடத்து கிறார்கள். இவர்களைக் கேள்வி கேட்பது யார்? இவர்க ளுக்குத் தண்டனை கொடுப்பது யார்? சட்டமா?அல்லது அறமா? இதனால்தான் பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து சுரண்டுதலுக்கு உள்ளாக்கப்படுகிறது. இதற்கு எதிராகவே கம்யூனிசம் எத்தனை புரட்சியை ஏற்படுத்தியது. ஆயினும் அதனை மீறி,முதலாளித்துவம் நவீன வடிவில் வீறு கொண்டெழுகிறது.

உயிர் காக்கும் வைத்தியத்துறை முழுமையாக முறைமை மாற்றம் (சிஸ்டம்) செய்யப்பட வேண்டும். இல்லையேல் வியட்நாமை போல் வைத்தியர்களை அதிகரிக்க வேண்டும். வியர்க்க உழைக்காத பணம் எப்படி இவர்களுக்கு நிலைக்கப் போகிறது? வட்டிக்காரன் பணம் வைத்தியனுக்கு என்பார்கள். வைத்தியன் பணம் எவருக்கோ.....? இலவசக் கல்வியிலே படித்தவர்கள் என்பதை இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் பணத்துக்குப் பணிபுரிகிறார்கள். எத்தனை பேர் சேவை செய்கிறார்கள்? மாபியாக்கள் என்பதை விட பலர் பணப்பிசாசுகளாகவே அலைகிறார்கள். சில நல்லவர்களும் உண்டு. அதில் சிலர் தனியார் வைத்தி யசாலை பக்கமே போகாதவர்களும் உண்டு.

மூன்று நிமிட சத்திர சிகிச்சைக்கு என்னிடம் 88ஆயிரத்து 500ரூபாய் அறவிட்டது யாழில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலை. அதில் 68 ஆயிரம் ரூபா வைத்தியருக்கு, பன்னிராயிரம் ரூபா உதவி வைத்தியருக்கும், மீதி வைத்தியசாலைக்கும் மருந்துக் கும். இந்த மூன்று நிமிட சத்திரசிகிச்சைக்கு இடையில் வைத்தியருக்கு தொலைபேசி அழைப்பு. இடையிலே நிறுத்திவிட்டு அவர் ஆசுவாசமாக பேசுகிறார். எவ்வளவு பொறுப்பற்ற செயல்பாடாக உள்ளது? அவர் மிகப் பிரபலமான வைத்திய நிபுணர். ஆனால் அந்தச் சத்திரசிகிச்சை எனக்கோ முழுமையாக பயனளிக்க வில்லை. மீள வினவிய போது சாட்டுப் போக்கு கதையை கூறினார். இவர் மிக ஏழைக் குடும்பத்தில் இருந்து வைத்தியர் ஆகியவர். கடந்து வந்த பாதையைக் கூட நினைக்க மறந்த மனிதர்கள். இப்படி எத்தனை பேரை ஏமாற்றுகிறார்கள்.

வட்டிக்காரனுக்கும் நிதி நிறுவனத்திற்கும் எப்படி புறம்பாடி பணம் கட்டுகிறார்களோ அப்படித்தான் இந்த தனியார் வைத்தியசாலைகளும் ஏழைகள் புழுதி வாரி தூற்றுகிறார்கள். அதை அவர்கள் புரிந்து கொள்வதாக தெரியவில்லை. 'ஒருவருக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்து விடு' என்றார் மகாகவி பாரதியார். இன்று பாரதி இருந்திருந்தால் இந்த வைத்தியர்களுக்கு என்ன சொல்லி இருப்பாரோ....

சாவகச்சேரிப் போராட்டம் என்பது தானாகச் சேர்ந்த கூட்டம். அந்த வைத்தியருக்கு ஆதரவு என்பதை விட மருத்துவத்துறையின் சீர்கேடுகள் மீது மக்களுக்கு இருந்த கூட்டுக்கோபத்தின் வெளிப்பாடு. அதை அந்த வைத்தியர் உள்ளே இருந்து கேள்விக்கு உட்படுத்தினார் என்பதனாலே ஆதரவுப் போராட்டம் வெகுசன தளத்தில் உருவாகியது. அவர் எழுப்பிய கேள்விகள் சரியா, தவறா தெரியவில்லை. அல்லது அவர் கூறிய குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரங்களை அவரால் இதுவரை முன்வைக்கப்படவில்லை. எழுமாறாக கூறுவதில் எந்த பயனும் இல்லை. இலங்கை மருத்துவத்துறையில் நீதி கிடைக்கும் என்று அவர் நம்புவது நகைப்புக்கிடமானது.

அரசு ஊழியர்கள் ஊடகங்களில் பேசுவதற்கு வரையறையும் அனுமதியும் தேவை. இவரது நேரலை நிகழ்ச்சியை நடத்திய ஊடகமும் சமூகப் பொறுப்பற்று நடந்து கொண்டது. ஓர் அரச ஊழியர் அரசியல் வாதிகள் போல் பேச முடியாது. இவரது கருத்துக்கள் இவருக்கு எதிராக மாறலாம். இவர் தனது ஜனநாயகப் போராட்டத்தை நிதானமாக, ஒழுங்கு முறையில் நகர்த்தவேண்டும். முகநூல் நேரலையால் எந்த பயனும் ஏற்படாது.அவரது குற்றச்சாட்டுக்களுக்கு விரைவில் ஆதாரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் எழுமாறாக கூறுவது நமது சமூகத்தில் இயல்பானதே. மூன்று வாரம்தான் இவர் பொறுப்பேற்று. அதற்குள் எதையும் மாற்றிட முடியுமா? அதை அவர் வேறு விதமாக கையாண்டிருக்கலாம். பலவருடப் பிரச்சினைக்கு ஒரே நாளில் தீர்வுகாண முடியாது. அண்மைக்காலத்தில் வடக்கில் நடந்த பாரிய வைத்தியத் தவறுகளுக்கு கூட எந்த நியாயமும் இதுவரைக் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் அதிகாரிகள் மன்னிப்புக் கூடக் கோரவில்லை. தினமும் நடைபெறும் வைத்தியத் தவறுகளுக்கு எவரும் பொறுப்பேற்பதாகக் கூட இல்லை. வைத்தியத்துறையிலே சாதாரண சிற்றூழியர் தொடக்கம் தாதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வரை பலர் தங்களை அதிமேதாவிகளாகவும் நோயாளிகளை அடிமைகளாகவும் நடத்துகின்ற – நடத்தியிருக்கின்ற – நடாத்தி வருகின்ற – பல சந்தர்ப்பங்கள் உண்டு.

இதில் இவர்களின் மனங்களிலே மாற்றம் ஏற்பட வேண்டும். இது மனிதாபிமானத் துறை என இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வுணர்வு ஏற்படாத வரைக்கும் சட்டங்களாலோ திட்டங்களாலோ எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

வைத்தியர்கள் நோயாளியின் நலன்காப்பாளர்கள் என்கின்ற நிலையை பலர் உணர்வதில்லை. அவர்களில் பலர் சாதாரண ஓர் அரசு ஊழியர் போல் கடமைக்காக நடந்து கொள்வதனால்தான் மக்களின் கூட்டுக் கோபத்தின் விளைவு விபரீதமாக மேலெழுந்தது.

ஆகவே சாவகச்சேரி வைத்தியரின் குற்றச்சாட்டு குற்றச்சாட்டாகவே போகக்கூடிய வாய்ப்பு உண்டு. புத்தரிடம் ஒரு தாய் கேட்டாராம் தனது இறந்த பிள்ளையின் உயிரை மீட்டுத் தருமாறு. சாவே நிகழாத இடத்தில் சாம்பல் எடுத்து வா என்றாராம் புத்தர். சாவகச்சேரி வைத்தியர் நிலையும் இப்படித்தான் முடியும். ஊழல் இல்லாத திணைக்களங்கள் இலங்கையில் உண்டா?




# மன்னாரில் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இறுதி நிலை பராமரிப்பு செயற்பாடுகள் நிறுத்தம்

## நோயாளர்கள் பெரும் அவதி நிலையில்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் மன்னார் மாவட்டத்தில் இறுதி நிலை நோயாளர்கள் எனக் கூறப்படும் புற்று நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் படுக்கை நிலை நோயாளிகள் போன்றவர்களுக்கான மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு ஏற்படும் செலவுகளையும் அலைச்சல்களையும் குறைப்பதற்காக நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று முன்னெடுக்கப்பட்டு வந்த சிகிச்சை நடவடிக்கைகள் கடந்த பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன எனப் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் குடும்பத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இறுதி நிலை நோயாளர்களாக இருப்பவர்களில் மருத்துவமனைகளில் வைத்துப் பராமரிக்க முடியாதவர்களும் கிளினிக் போன்ற செயற்பாடுகளுக்கு வாகனங்களில் அழைத்துச் செல்ல வசதிகளற்ற வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பாமர மக்களுமே இந்தச் சேவையைப் பெற்று வந்தார்கள்.



ஆனால் திடீரென இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டம்சியால் இறுதி நிலை நோயாளர்களும், நோயாளிகளின் குடும்பத்தினரும் மிகவும் சிரமப்படுகின்றமையுடன் பாரிய மன உளைச்சல்களுக்கும் உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த இறுதி நிலை மருத்துவ சேவை நிறுத்தப்பட்டதால் விரும்பத்தகாத மரணமும் நிகழ்ந்துள்ளன எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறுதி நிலை நோய் பராமரிப்பில் மன்னார் மாவட்டம் முழுவதும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் உள்ளனர் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து மீண்டும் மன்னார் மாவட்டத்தில் இறுதி நிலை நோயாளர் பராமரிப்பைச் செயற்படுத்த முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான வைத்தியர்கள் சிலரின் பெயர்களைஜ் குறிப்பிட்டு பொதுமக்கள் கடிதம் அனுப்பியுள்ளார்கள். விரைவாக மக்களுக்கான இறுதிப் பராமரிப்பு செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



# கிண்ணியாவில் பெண்மணி ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர்ப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கூபா நகர் கிண்ணியா - 03 ஐச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து 11கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்தப் பெண்ணை சோதனையிட்ட போது அவரிடம் இருந்து விற்பனைக்காக வைத்திருந்த ஐஸ் போதை பொருளை மீட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர். இவர் முன்னரும் போதை பொருள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் தெரியவருகிறது. இந்தப் பெண் போதை பொருள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரனைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சூரியசக்தி மின்சாரம் வழங்கலில் யாழ். மாவட்டத்தில் முறைகேடு!

## அமைச்சிடம் அறிக்கை கோருகிறது ஜனாதிபதி செயலகம்!

யாழ். மாவட்டத்தில் சூரியசக்தி மின்னிணைப்பு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்து குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கயிடுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிராந்திய மின் இணைப்புப் பொறியிலாளர் காரியாலயத்தில் சூரியசக்தி இணைப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது முறைகேடான விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன எனவும், மிக நீண்ட காலமாக விண்ணப்பத்தவர்களின் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும், இவை குறித்து மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு முறைப்பாடு செய்த வாடிக்கையாளர் ஒருவர் பழிவாங்கப்படுகிறார் எனவும் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்தே ஜனாதிபதியின் செயலாளரினால் இந்த விடயம் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கையிடுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது.




# ஜனாதிபதித் தேர்தல் அச்சு வேலைகளுக்காக 600 முதல் 800 மில்லியன் ரூபா செலவாகலாம்

## அரச அச்சகம் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் அச்சுப்பணிகளுக்காக அதிகபட்சம் 600 முதல் 800 மில்லியன் ரூபா செலவாகுமென அரச அச்சகம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வாக்குச்சீட்டின் அளவைப் பொறுத்து இந்த தொகையில் மாற்றம் ஏற்படலாமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பான பத்திரங்கள் அச்சிடப்படும் என அரச அச்சகர் கூறியுள்ளார்.




எனினும் தேர்தலில் அதிகரிகளின் கடமைகளுக்கு தேவையான மக்கள் தொகை கணக்கெடுப்பு படிவங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளன எனவும் அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டுள்ளார்.





# சிறைச்சாலை தினத்தை முன்னிட்டு மட்டு சிறையில் இரத்ததான நிகழ்வு

(பழுவூரான்)

119 ஆவது சிறைச்சாலை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறை கைதிகளின் நலன்புரிச் சங்கம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப்பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்புச் சிறைச்சாலை பிரதான காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைக் கைதிகளின் நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப்பிரிவு வைத்தியர் கீர்த்திகா மதனழகன், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், சிறைச் சாலை உத்தியோகத்தர்கள், சிறைக் கைதிகளின் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.




























# பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி

கொழும்பில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 06 ஏக்கர் காணி 2019 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி 12 பில்லியன் ரூபாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டமை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

அத்துடன், அனுமதிக்கப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறாது வேறு நிபந்தனைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையும் அம்பலமாகியுள்ளது.



எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் வரைபவு தொடர்பில் சட்டப் பணிப்பாளருக்கு எதிராக ஒழுங்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருவதாக கோப் குழு முன்னிலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தலைமையில் அண்மையில் கூடிய கோப் குழுவிலேயே இந்த விடயங்கள் தெரியவந்தன.

மேற்படி காணியை பணிப்பாளர் சபையின் உத்தியோகப்பூர்வ அனுமதியின்றி குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக அதிகாரசபைக்கு 330 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரங்கள் தொடர்பாக முறையான அறிக்கையை 2 வாரங்களுக்குள் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.








# அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி தெரிவிப்பு!

(பழுவூரான்)

அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து கூட்டமைப்பாகப் போட்டியிட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஆனால் கட்சிச் செயற்பாடுகளுக்கும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிக்கும் தொடர்பில்லை எனத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் படுகின்ற



அபிவிருத்தித் திட்ட நிகழ்ச்சிகளில் அத்திட்டங்களை முன்மொழிந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளை மக்கள் பாவனைக்காக அவை கையளிக்கப்படுகின்ற போது அந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை குறித்து துறைக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து அமைச்சர் இந்த விடயத்தை ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு தெரியப் படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றாக இணைந்து கூட்டமைப்பாகப் போட்டியிட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஆனால் வீட்டுச் சின்னம் நீதிமன்றில் வைக்கப்பட்டுள்ளது. அடுத்த தேர்தலில் அது வெளியில் வருவதே சந்தேகம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரிந்துள்ளதன் காரணமாக நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவியை செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கமுடியாது என்ற வகையில் சிலர் பேசி வருகின்றனர்.

ஆனால் கட்சிச் செயற்பாடுகளுக்கும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிக்கும் தொடர்பு இல்லையென்ற காரணத்தினால் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராகவுள்ள செல்வம் அடைக்கலநாதனை நாடாளுமன்ற குழுக்களின் தலைவராக நியமிக்குமாறு கோரியுள்ளோம். - என்றார்.



# காற்றின் வேகம் தீவிரமாகும் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக்கூடும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையிலும்அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 முதல் 65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம் மேற்படி கடற் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் கூறியுள்ளது.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையிலும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையிலும் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்களையும் கடல்சார் ஊழியர்களையும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.07.2024




இன்று உங்களிடம் விரைந்து முடிவெடுக்கும் திறன் காணப்படும். உங்கள் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் நன்மை அடைவீர்கள்.

உங்கள் தனித்த திறன் உங்கள் செயல்திறனில் வெளிப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் விருப்பமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பணிகள் சமூகமாக நடக்காது. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். தகுந்த பலன்கள் கிடைக்காது. என்றாலும் கட்டுப்பாட்டுடன் சுமூகமாகச் செயல்களை செய்ய வேண்டும் ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் சூழ்நிலை இருக்காது. சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

மன உளைச்சல் காரணமாக இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




றான முடிவுகளை எடுப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று பண வரவு காணப்படாது. முடிந்த அளவு சேமிக்க வேண்டும். என்றாலும் நீங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரும்.

கண்களில் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் தேவை.




இன்று வளர்ச்சி காணப்படும். இன்று நீங்கள் உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமைகளை பயன்படுத்தி செயலாற்றுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்களின் இந்த நேரடி அணுகுமுறை காரணமாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள். புதிய முதலீட்டிற்கான முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும். கடினமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் சமாளிக்க வேண்டும். தன்னம்பிக்கையை பராமரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். பணிகளை செய்யும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சண்டைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். நீங்கள் அமைதியாக இருப்பதன் மூலம் எதிர்மறை விளைவுகளை சமாளிக்கலாம்.பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். பணத்தை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முன்னேற்றத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். கணிசமாக பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்சிகரமான பலன்கள் கிடைக்காது. எனினும் எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். இன்று பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். அது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்கள் கையிருப்பை கரைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று குறைந்த அனுகூலமான நாள்.




இன்று நன்மை நடக்கும் நாள். உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். விளையாட்டுப் போக்கில் இன்று உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

பணிகள் அதிகமாக காணப்பட்டலும் நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். இன்று உங்கள் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சியில் இருவரும் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறையான போக்கு காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.07.2024




இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் செயல் திறன் கண்டு சக பணியாளர்கள் பொறாமைப்படுவார்கள்பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். உங்கள் அன்பை புரிந்து கொண்டு அவரும் பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கூடும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது.இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கவனமின்மை காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சக பணியாளர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள்.

தேவையற்ற மனக்குழப்பம் காரணமாக அற்ப விஷ யங்களில் உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள்.

பண வரவு சுமாராக இருக்கும். பணம் சம்பாதிப்ப தற்கான வாய்ப்பும் குறைவு.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்களை உண்பதை தவிர்க்க வேண்டும்.




இன்று உற்சாகமும் ஆற்றலும் குறை யும்படியான சூழ்நிலை உருவாகும். குறைந்த எதிர்பார்ப்புடன் உங்கள் செயல் களை ஆற்றினால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாகஇருக்காது. பணிகள் அதிகமாக காணப்படுவதால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் நட்புடன் அணுக வேண்டும். இதனால் நல்லுறவை பராமரிக்க முடியும்.பயணத்தின்போது பணம் இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக் கியத்தில் கவனம் தேவை.




இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப் படும். இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதக மாக இருக்கும். உங்களுக்கு கொடுக் கப்பட்ட பணிகளை விரும்பி செய்வீர்கள். உங்கள் திறமை மற்றும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல லாபமும் பண வரவும் காணப்படும்.

உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE: No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE: No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9849 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park







# மக்கள் வங்கியால் கண்டி சிட்டி சென்டரில் விசேட கடனட்டை ஊக்குவிப்பு நிகழ்வு

மக்கள் வங்கி தனது 63 ஆவது ஆண்டு பூர்த்தியை யொட்டி, கண்டி சிட்டி சென்டர் வளாகத்தில் கடந்த 08 ஆம் திகதி முதல் இன்று வரை விசேட கடனட்டை ஊக்குவிப்பு நிகழ்வொன்றை நடாத்தி வருகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 08 ஆம் திகதி கண்டி சிட்டி சென்டரில் இடம்பெற்றதுடன், மக்கள் வங்கி கடனட்டைகள் பத்து வாடிக்கையாளர்களுக்கு இங்கு வைத்து கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (கொடுப்பனவுகள், செயல்முறை முகாமைத்துவம் மற்றும் தர உத்தரவாதம்) திருமதி நில்மினி பிரேமலால், கண்டி சிட்டி சென்டர் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் துசித விஜயசேன, மக்கள் வங்கியின் அட்டைகளுக்கான தலைமை அதிகாரி ஜே.எ. டயஸ், கண்டி பிராந்திய முகாமையாளர் திரு. நளின் பொத்தேவல, உயர் அதிகாரிகள் மற்றும் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இந்த ஊக்குவிப்பு நிகழ்வின் கீழ், மக்கள் வங்கி கடனட்டைகளுக்கு கண்டி சிட்டி வளாகத்தில் இன்று வரை 75 வீதம் வரையான தள்ளுபடிகள் கிடைக்கப் பெறுவதுடன், KCC வணிக வளாகத்திலுள்ள KCC food court (World Spice), Sri Lankan at the Terrace, Gelateria, Fresh, Café Walk, Bakes & Cakes, KCC World Play, KCC Multiplex (Cinema), KCC VR Game Zone ஆகியவற்றில் ஜுலை 31 வரை 25 வீதம் தள்ளுபடிகள் கிடைக்கப்பெறுகின்றன.

மேலும், KCC வணிக வளாகத்திலுள்ள ஏனைய பல வணிக மையங்களிலும் பல்வேறு தள்ளுபடிகள் கிடைக்கப் பெறுகின்றன.

புதிதாக மக்கள் வங்கி கடனட்டைகளைப் பெற்றுக் கொள்கின்றவர்களுக்கு முதல் ஆண்டுக்குரிய கட்டணத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளதுடன், இக்காலப்பகுதியில் புதிதாக கடனட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணைவுக் கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணம் ஆகியவற்றுக்கும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் வங்கியின் இருபதுக்கு 20 வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெற்றிகரமாக நிறைவு




மக்கள் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர் இருபதுக்கு இருபது வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில், மு.பூ. குபைாவநசள அணி வெற்றியாளர்களாக முடிசூடிய அதேவேளையில், Dumbara Strikers அணி இரண்டாம் இடத்தை தனதாக்கியுள்ளது.

எட்டு தினங்களாக இடம்பெற்ற இச்சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளின் கீழ் 08 அணிகள் போட்டியிட்டன. மக்கள் வங்கியின் ஊழியர்கள் இந்த இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றியதுடன், இறுதிப்போட்டி அடங்கலாக, மொத்தமாக 16 போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா, வங்கியின் சிரேஷ்ட உயர் அதிகாரிகள் முன்னிலையில் இறுதிப்போட்டி இடம்பெற்றது.








# சியபத பினான்ஸ் பி.எல்.சியின் நாவலப்பிட்டி கிளை திறப்பு

முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி. தனது வாடிக்கையாளர்களுக்காக, நாவலப்பிட்டியில் கம்பளை வீதி, இலக்கம் 54 இல் தனது 49 ஆவது கிளையை அண்மையில் திறந்து வைத்துள்ளது.

அதன் நாடளாவிய வலையமைப்பிற்கு புதியதொரு சேர்க்கையான நாவலப்பிட்டி கிளையானது, அதன் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் முழுமையான நிதித் தீர்வுகள் மூலம், வர்த்தக சமூகத்தை வலுவூட்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளையின் திறப்பு விழாவில் சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள், நாவலப்பிட்டி பிரதேச செயலாளர் ஜே.எம்.ரம்யா ஜயசுந்தர, நகர சபை செயலாளர் பிரியங்கா சாந்தனி உட்பட அரச அதிகாரிகள், பி. களுகம்பிட்டிய, பொது சுகாதார பரிசோதகர் நுவான் கெகுலந்தர, கிராம உத்தியோகத்தர் ஜயலத் பெரேரா, தொழிற்சங்கத் தலைவர் திரு. கித்சிறி கருணாதாச, அரசாங்க மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

புதிய கிளை திறப்பு விழா குறித்து சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

“நாவலப்பிட்டியானது விவசாயத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட பிரதேசமாகும். தேயிலை மற்றும் கோப்பி பயிர்ச்செய்கையில் இருந்து மசாலா உற்பத்தி வரை, மக்கள் விவசாயத்தை தங்கள் முதன்மையான வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இந்தப் பகுதியில் எங்களது விரிவாக்கம், அவர்களின் தொழில்களை உயர்த்துவதற்கும், அதனால் அவர்களின் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கும் மிகவும் தேவையான நிதி உதவியை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.”– என்று குறிப்பிட்டார்.















# யூனியன் அசூரன்ஸ் அனுசரணையில் நயோமி இராஜரட்ணமின் Epic Black

பிரபலமான நடன ஒழுங்கமைப்பு மையமான With My Feet ஆனது, யூனியன் அசூரன்ஸின் அனுசரணையுடன் பழம்பெரும் நடன கலைஞரும் மற்றும் நடன இயக்குனருமான நயோமி இராஜரட்ணமின் Epic Black நிகழ்வை நடாத்தவுள்ளது.

பல்வகைப்பட்ட நடனப் பாணிகளை வெளிப்படுத்தவுள்ள Epic Black நிகழ்வானது, ஓகஸ்ட் 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் பிஷப் கல்லூரியின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எத்தனையோ நட்சத்திர நிகழ்வுகளை நடாத்தியுள்ள With My Feet இன் நீண்ட பட்டியலில் இந்த நிகழ்வும் சேர்க்கப்படவுள்ளதுடன், With My Feet இன் பின்னாலுள்ள உந்துசக்தியும், மக்கினொன்ஸ் டிராவல்ஸின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியும், இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் உப தலைவரும், மற்றும் அமெச்சூர் நடன சங்கத்தின் முன்னாள் தலைவருமாக சேவையாற்றி இந்த ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கிய அமரர் ட்ரெவோர் இராஜரட்ணத்திற்கு செலுத்தும் இதயபூர்வமான அஞ்சலியாகவும் இந்நிகழ்வு அமையவுள்ளது.

அவரது தளராத மனப்பான்மை, பாரம்பரியச் சிறப்பு மற்றும் “நிகழ்ச்சி தொடர்ந்து இடம்பெற வேண்டும்” என்ற நம்பிக்கை With My Feet மற்றும் அக்குழுவின் பிரதிபலிப்பாக உள்ளது.


2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் எத்தனையோ மகத்தான நடன நிகழ்வுகள் மூலம் தலைமுறைகள் மத்தியில் பார்ப்போரை வசியப்படுத்துவதில் With My Feet தன்னை நிரூபித்துள்ளது.

எதிர்வரும் Epic Black நிகழ்வானது இலத்தீன் அமெரிக்க, போல்றூம், சமகால மற்றும் சங்கமம் அடங்கலாக, பல்வகைப்பட்ட நடனப் பாணிகளை கண்ணைக்கவரும் வகையில் காட்சிப்படுத்த சர்வதேசரீதியான அங்கீகாரம் பெற்ற திறமைசாலிகளைக் கொண்ட குழுவால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.








# சிறுவர்களின் கணிதத் திறனை உயர்த்த செலான் டிக்கிரி, UCMAS உடன் இணைகிறது

நாட்டின் முன்னணி சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான செலான் டிக்கிரி, சிறுவர்களின் கணிதத் திறன்களை மேம்படுத்துவதற்காக அபாகஸ் அடிப்படையிலான கற்றல் முறையான Universal Concept Mental Arithmetic System (UCMAS) உடன் சமீபத்தில் கைகோர்த்தது.

பொதுவாக சிறுவர்கள் சலிப்பாகவோ அல்லது புரிந்து கொள்ள கடினமாகவோ கருதும் பாடமான கணிதத்தை கற்றல் செயன்முறையை சுவாரஸ்யமாக்குவதன் மூலம் சிறுவர்கள் அதனை சிறப்பாகவும் எளிதாகவும் கற்க உதவுவதே செலான் டிக்கிரியின் இம்முயற்சியின் நோக்கம் ஆகும். இது 4 தொடக்கம் 13 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக வடிவமைக் கப்பட்ட திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இணைவு, 2024 ஜுன் 25 அன்று செலான் வங்கி யின் தலைமையகத்தில் அண்மைய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில், தற்போதைய UCMAS மாணவர்களின் திறன்கள் நேரடியாக காட்சிப்படுத்தப்பட்டதோடு கணிதத்தை புரிந்துகொள்ள கஷ்டப்படும் மாணவர்களின் வாழ்க்கையை எளிதாக்கும் கல்வி முயற்சிகளுக்கு நிதி மற்றும் ஆதரவு அளிப்பதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. சிறுவர் கள் தங்கள் கல்வி ஊடாக சிறந்த பலனைப் பெறுவதற்கு அதனை மகிழ்ச்சியுடன் கற்பது அடிப்படையானது என்பதை நினைவூட்டுவதாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

எப்போதும் சிறுவர் நட்புறவான புதுமைகள் மற்றும் முன்முயற்சிகளைத் தேடுவதில் ஆர்வம் காட்டும் செலான் டிக்கிரி, UCMASஇன் தனித்துவமான சிறுவர் மேம் பாட்டுத் திட்டத்துடன் இணைந்தமை இலங்கையில் அடுத்த தலைமுறையின் அறிவுசார் திறன்களை வளர்ப்பதில் இரு சாராரதும் பகிரப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

மாற்றத்தை ஏற்படுத்தும் கல்வியை வழங்குவதே UCMASஇன் நோக்கம் ஆகும். மனக் கணித மேம்பாட்டு திட்டத்தை நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு வழங்குவ தன் மூலம் சாதகமான மற்றும் கவனத்தை ஈர்க்கும் கற்றல் அனுபவங்களை எளிதாக்க முயற்சி செய்கிறார்கள். 1993ஆம் ஆண்டு மலேசியாவில் நிறுவப்பட்ட, UCMAS திட்டமா னது ஐஎஸ்ஓ சான்றளிக்கப்பட்டதுடன் தற்போது 35இற்கும் மேற்பட்ட இடங்களில் செயற்படுகிறது. அதன் செயற்பா-டுகள் இலங்கையில் 2004இல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

ஒரு வர்த்தக நாமமாக செலான் டிக்கிரி எப்போதும் அதன் விழுமியங்களை நடைமுறைப்படுத்த முயன்று வருகிறது. இந்த முன்முயற்சியானது, டிக்கிரி தலைமுறையை எதிர் காலத்திற்கு தயார்படுத்துவதற்காக செயற்படுத்தப்பட்ட பல முயற்சிகளைப் பின்பற்றுகிறது. UCMAS உடனான இந்த முன்முயற்சி, டிக்கிரி சிறுவர்களை கணிதத் திறன்களை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கும் அதேவேளை சிறுவர்கள் சிறப்பாகக் கற்க உதவும் ஆக்கப்பூர்வமான உத்திகளைக் கண்டறியும் வண்ணம் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களி டம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண் டது.